www.Padasalai.Net www.CBSEtips.in

M

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2023

காலம் : 1.30 மணி

10 - ஆம் வகுப்பு

## தமிழ்

மதிப்பெண்கள் : 50

பகுதி - அ

7X1=7

I சரியான விடையைத் தெரிவு செய்து குறியீட்டுடன் எழுதுக.

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. மொழி ஞாயிறு என்று அழைக்கப்படுபவர்
(அ) பெருஞ்சித்திரனார் (ஆ) பாவாணர் (இ) தமிழழகனார் ஈ) இளங்குமரனார்

3. அறிஞரது நூல், அறிஞருக்கு நூல் – என்னும் தொடர்களில் பொருளை வேறுபடுத்துவது
(அ) உவம உருபு (ஆ) எழுவாய் (இ) உரிச்சொல் ஈ) வேற்றுமை உருபு

4. 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் அடி உணர்த்தும் செய்தி
(அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் (ஆ) கடல்நீர் ஒலித்தல்
(இ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

5. காசிக்காண்டம் என்பது
அ) காசி நகரின் பெருமையைப் பாடும் நூல் ஆ) காசி நகரின் வரலாற்றைப் பாடும் நூல்
இ) காசி நகரின் வேறு பெயர் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

பாடலைப் படித்து வினா எண் 6,7க்கு விடையளிக்கவும்.

*அன்று அவண் அசைஇ அல்சேர்ந்து அல்கி*
*கன்று எரி ஒள்ளிணர் கடும்பொடு மலைந்து*
*சேர்ந்த செயலைச் செப்பம் போகி*

6. அசைஇ – என்பது எவ்வகை அளபெடை
அ) இன்னிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை
இ) செய்யுளிசை அளபெடை ஈ) இசைநிறை அளபெடை

7. 'கடும்பு' என்னும் சொல் உணர்த்தும் பொருள் யாது?
அ) சுற்றம் ஆ) கூத்தர் இ) பள்ளம் ஈ) மலை

பகுதி - ஆ

3x2=6

II எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.
(வினா எண் 11க்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)

8. *விடைக்கேற்ற வினா அமைக்க.*
அ) 'பாட்டுக்கொரு புலவன்' எனப் பாராட்டப்படுபவர் பாரதியார்.
ஆ) காசி நகரத்தின் பெருமைகளைக் கூறுகிற நூல் காசிக்காண்டம்.

9. வசன கவிதை – குறிப்பு வரைக.

10. இறடிப் பொம்மல் பெறுகுவிர் – இவ்வடி உணர்த்தும் பொருள் யாது?

11. "முயற்சி" எனத் தொடங்கும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

2x2=4

III எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி.

12. வேங்கை – இத்தொடர் தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் அமைவதை விளக்குக.

13. தொகை வகை கண்டு தொடரில் அமைக்க – எழுகதிர், இன்சொல்

14. ஒரே தொடரில் அமைக்க – மலை – மாலை ; விடு – வீடு

Scanned with CamScanner



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பகுதி – இ

IV ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1X3=3

15. இளம்பயிர் வகை எவையேனும் ஐந்தனைத் தொடரில் அமைக்க.

16. சோலைக்காற்றும் மின்விசிறி காற்றும் பேசிக்கொள்வது போல் உரையாடல் அமைக்க.

V ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1X3=3

17. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக, பாவலரேறு பெருஞ்சித்திரனார் கூறுவன யாவை?

18. "சிறு தாம்பு......" எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

பகுதி – இ'

VI ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1X3=3

19. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு – *இக்குறளில் அமைந்துள்ள அணியை விளக்குக.*

20. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.
இப்பகுதியில் உள்ள தொகைநிலைத் தொடர் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.

பகுதி – ஈ

VII அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3X4=12

21. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



22. மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று,முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. (அல்லது)
உணவு விடுதி ஒன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

23. தமிழில் மொழி பெயர்த்துத் தலைப்பிடுக.
The golden sun sets up early in the morning and starts its bright rays to fad away the dark. The milky clouds start their wandering. The colourful Birds start Twitting their morning melodies in percussion.The cute butterfly dance around the flowers. The flowers's fragrance fills the breeze.The breeze gently blows everywhere and makes everything pleasure. (அல்லது)
புயலின் போது நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை எழுதுக.

பகுதி – உ

VIII அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 2X6=12

24. அ) தமிழ்ச் சொல்வளம் குறித்தும் தமிழ்ச் சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் கட்டுரை வரைக.
(அல்லது)
ஆ) முல்லைப்பாட்டு உணர்த்தும் கார்காலச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

25. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவர் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டை நும் பாடப்பகுதியால் விளக்குக. (அல்லது) ஆ) "சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

Scanned with CamScanner



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

முதல் இடைப்பருவத் தேர்வு - தமிழ் 2023

விடைக்குறிப்பு

1) அ. வணிகக் கப்பல்களும் ஐம்பெரும்காப்பியங்களும்

2) ஆ. பாவாணர்

3) ஈ. வேற்றுமை உருபு

4) அ. கடல்நீர் ஆவியாகி மேகமாதல்

5) அ. காசி நகரின் பெருமையைப் பாடும் நூல்

6) ஆ. சொல்லிசை அளபெடை

7) அ. சுற்றம்

8) அ. பாட்டுக்கொரு புலவன் எனப் பாராட்டப்படுபவர் யார் ?

ஆ. காசி நகரத்தின் பெருமைகளைக் கூறுகிற நூல் எது ?

9) செய்யுளும் உரைநடையும் கலந்து யாப்பு கட்டுகளுக்கு அப்பாற்பட்ட கவிதை வடிவம். தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

10) இறடி - தினை ; பொம்மல் - சோறு இறடிப் பொம்மல் பெறுகுவிர் - தினைச் சோற்றைப் பெறுவீர்கள் எனப் பொருள்படும் .

11. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை

இன்மை புகுத்தி விடும்.

12) தனிமொழி : 'வேங்கை' என்னும் சொல் தனித்து நின்று ' வேங்கை மரம்' என்னும் பொருளைக் குறிக்கும் .

தொடர்மொழி : 'வேங்கை' - இரு சொல்லாக பிரிந்து நின்று வேம் + கை - வேகின்ற கை எனவும் பொருள் தரும் .

பொதுமொழி : இவ்வாறு மரம் , வேகின்ற கை என இரு பொருள்களுக்கும் பொதுவாய் அமைவதால் பொது மொழியாக இருக்கிறது .

13) எழுகதிர் - வினைத்தொகை, எழுகதிரைக் கண்ட பனி விலகியது.

இன்சொல் - பண்புத்தொகை. இன்சொல் பேசுதல் நற்பண்புகளுள் ஒன்று.

14) மாலையில் மலை அழகு. பள்ளி விட்டு வீடு செல்.

www.Padasalai.Net

15) 1. வயலில் நெல் நாற்று நட்டேன் .

2. வயலில் மாங்கன்று வாங்கி நட்டேன் .

3. தென்னம்பிள்ளை வாங்கி வந்தேன்.

4. காட்டில் பனை மடலியைப் பார்த்தேன் .

16) 1. சோலைக் காற்று : அடர்ந்த மரங்கள், நீர் நிறைந்த பூங்காக்கள் , செடிகள் கொடிகள் நிறைந்த குளிர்ச்சியான இடமே எனது இடம் ஆகும்.

மின்விசிறி காற்று ; நான்கு சுவர்கள் அடங்கிய அறையே எனது இருப்பிடம் ஆகும் .

2. சோலைக் காற்று : நான் எப்போதும் குளிர்ச்சி நிறைந்த காற்றையே வீசிக் கொண்டிருக்கிறேன்.

மின்விசிறி காற்று : நான் எப்போதும் வெதுவெதுப்பான சூடான காற்றையே வீசிக் கொண்டிருக்கிறேன்.

3. சோலைக் காற்று : மக்கள் மாலை நேரங்களில் பொழுதுபோக்கிற்காக தூய காற்றைப் பெற என் இருப்பிடம் தேடி வருகின்றனர் .

மின்விசிறிக் காற்று : வீட்டில் இருப்பவர்கள், பணி செய்பவர்கள் என் இருப்பிடம் தேடி வந்து காற்றைப் பெறுகிறார்கள்.

4 .சோலைக் காற்று : சிறுவர்கள் மாலை நேரங்களில் விளையாடுவதற்காகவும் காதலர்கள் பொழுதுபோக்கவும் நான் பயன்படுகிறேன்.

மின்விசிறிக் காற்று : எல்லா நேரங்களிலும் மனிதர்களுக்கு தேவைப்படும் நேரத்தில் நான் காற்று தந்து உதவுகிறேன்.

17) அன்னை மொழியே! அழகான செந்தமிழே ! முன்னைக்கும் முன்னையான நறுங்கனியே ! கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் அரசாண்ட மண்ணுலகப் பேரரசே ! பாண்டியனின் மகளே! திருக்குறளின் பெருமைக்குரியவளே ! பத்துப்பாட்டே ! எட்டுத்தொகையே ! பதினெண் கீழ்க்கணக்கே ! நிலைத்த சிலப்பதிகாரமே ! நினைவுகளால் தலை பணிந்து வாழ்த்துகின்றோம் எனக் குறிப்பிடுகின்றார்

18) சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்

உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்

நடுங்கு சுவல் அசைத்த கையள், “கைய

கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர

www.Padasalai.Net

இன்னே வருகுவர், தாயர்” என்போள்

நன்னர் நன்மொழி கேட்டனம்

19) இக்குறளில் உவமைஅணி அமைந்துள்ளது.

ஒரு பொருளை ஒப்புமைப்படுத்தும் போது , உவமை தனித்தொடராகவும் உவமேயம் தனித் தொடராகவும் அமைந்து , இடையில் உவமஉருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.

குறள் விளக்கம்:

வேலைக் கையில் ஏந்தி நின்று வழிப்பறி செய்யும் கள்வர்களைப் போல, ஆட்சியில் கொடுங்கோலைக் கையிலேந்தி குடிமக்களிடம் வரி விதித்து பொருள் பெறுவதாகும் .

அணிப் பொருத்தம்:

வேலொடு நின்றான் இடுஎன்றது - உவமை

கோலொடு நின்றான் இரவு - உவமேயம் ( பொருள் )

போலும் - உவம உருபு.

20) ) மல்லிகைப்பூ - இருபெயரொட்டுப்பண்புத்தொகை.

(ii) பூங்கொடி - உவமைத்தொகை

(iii) ஆடுமாடுகளுக்கு - உம்மைத்தொகை

(iv) தண்ணீர்த்தொட்டி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை . (v) குடிநீர் - வினைத்தொகை

(vi) சுவர்க்கடிகாரம் - வேற்றுமைத்தொகை

(vii) மணி பார்த்தாள் - வேற்றுமைத்தொகை

21) பொருத்தமான கவிதை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்.

22) அ. அஅஅஅஅ

7-8- -2023

அன்புள்ள தோழனுக்கு,

நலம். நலமறிய ஆவல். மாநில அளவில் நடைபெற்ற, " மரம் இயற்கையின் வரம் " என்னும் தலைப்பில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் நீ கலந்து கொண்டு வெற்றிபெற்றதை அறிந்து மிக்க மகிழ்ச்சி.

www.Padasalai.Net

இதனைப் போலவே இன்னும் பல வெற்றிகள் பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு

உன் அன்பு தோழன்

உறைமேல் முகவரி :

ஆ)

அனுப்புநர் :

சே. இராமன்,

101/22, தெற்குரத வீதி,

அஅஅஅஅ.

பெறுநர் :

உணவுப் பாதுகாப்பு ஆணையர்,

உணவுப் பாதுகாப்பு ஆணையம்,

ஆஆஆஆஆ.

ஐயா,

பொருள் : உணவு விடுதி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கடிதம்.

வணக்கம், இன்று காலை மேலவீதியில் உள்ள தனியார் உணவு விடுதியில் காலை உணவு சாப்பிட்டேன். அவ்வுணவு தரம் இல்லாமலும் விலை அதிகமாகவும் இருந்தது. அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டேன். எனவே அந்த உணவு விடுதி மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

இடம் : அஅஅஅஅ.

நாள் : 15-5-2021

இப்படிக்கு

தங்கள் உண்மையுள்ள

சே.இராமன்

உறைமேல் முகவரி :

பெறுநர் :

உணவுப் பாதுகாப்பு ஆணையர்,

உணவுப் பாதுகாப்பு ஆணையம்,

www.Padasalai.Net

ஆஆஆஆஆஆ.

23) பொருத்தமான மொழிபெயரப்பு இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்.

24) அ.

(1) சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும், தமிழ் மட்டும் அதில் தலைசிறந்ததாகும்.

(ii) "தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒரு பொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத் தெளிவாகத் தோன்றும்.

(ii) தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும்சொற்களும் தமிழில் உள்ளது என்கிறார் கால்டுவெல் (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்).

(iv) தமிழ்ச் சொல் வளத்தைப் பலதுறைகளிலும் காணலாமேனும், இங்குப் பயிர்வகைச் சொற்கள் மட்டும் சிறப்பாக எடுத்துக்காட்டப்பெறும்.

அடி வகை :

ஒரு தாவரத்தின் அடிப் பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள்.

தாள் : நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி

தண்டு : கீரை, வாழை முதலியவற்றின் அடி

கோல்: நெட்டி, மிளகாய்ச் செடி முதலியவற்றின் அடி

தூறு : குத்துச் செடி, புதர் முதலிவற்றின் அடி

தட்டு அல்லது தட்டை : கம்பு, சோளம் முதலியவற்றின் அடி.

கழி : கரும்பின் அடி

கழை : மூங்கிலின் அடி

அடி : புளி, வேம்பு முதலியவற்றின் அடி,

23) அ

முன்னுரை :

கிராமத்து வெள்ளந்தி மனிதர்களின் இயல்பான வரவேற்பும் எளிமையான உணவும் மதிய வேக்காட்டில் நடந்துவந்த களைப்பை மறக்கடிக்கச் செய்துவிடும். பசித்த வேளையில் வந்தவர்களுக்குத் தம்மிடம் இருப்பதையே பகிரிந்து

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

கொடுக்கிற நேசம் கிராமத்து விருந்தோம்பல். அந்நிகழ்வை நம்முன் காட்சிப்படுத்துகிறது கி.ராஜநாராயணனின் கோபல்லபுரத்து மக்களின் கதைப்பகுதி.

சுப்பையாவின் ஐயம் :

சுப்பையாவின் புஞ்சையில் அருகு (களை) எடுத்துக்கொண்டிருந்தார்கள். இடையில் காலைக்கஞ்சியைக் குடிக்க உட்கார்ந்தார்கள். அப்போது தொலைவில் அன்னமய்யாவுடன் ஒருவர் வருவதைச் சுப்பையா பார்த்தான். "யாரோ ஒரு சாமியாரை இழுத்துட்டு வாரான்" என்று சுப்பையா கூற அங்கிருந்த ஒருவர் "வரட்டும் வரட்டும் ஒரு வயித்துக்குக் கஞ்சி ஊத்தி நாமும் குடிப்போம்" என்று கூறினார். அவ்வழியாகச் செல்லும் தேசாந்திரிகள் இவர்களிடம் தண்ணீரோ கஞ்சியோ சாப்பிட்டுவிட்டுப் போவது வழக்கம்.

அன்னமய்யாவுடன் வந்த வாலிபன் :

அன்னமய்யாவுடன் வந்தவன் தாடியும் அழுக்கு ஆடையும் தள்ளாடிய நடையுடன் இருந்தான். சோர்வாகக் காணப்பட்டான். அந்தப்பக்கம் வந்த அன்னமய்யா அவ்வாலிபனை அருகில் சென்று பார்த்தார். பசியால் வாடிய முகம், கண்களில் தெரிந்த தீட்சண்யம் கவனிக்கக் கூடியதாய் இருந்தது. அவன் முகத்தில் சிறு புன்னகையை மட்டும் காட்டினான். பேசுவதற்கு விரும்பாதவன் போல் இருந்தான்.

லாட சன்யாசிகள் :

அந்தச் சாலைவழியாக பலவகையான தேசாந்திரிகள் வருவார்கள். அவர்களுள் முக்கியமானவர்கள் லாட சன்யாசிகள் அவர்கள் வேட்டி கட்டிக்கொள்ளும் முறை புதுவிதமாக இருக்கும். இதனைப்பார்த்து கோபல்லபுரத்துக் குழந்தைகள் அவர்களைப் போலவே வேட்டிகட்டிக் கொண்டு விளையாடுவர்.

அன்னமய்யாவின் விசாரிப்பு :

அன்னமய்யாவைப் பார்த்து அவன் மென்மையாகச் சிரித்தான். அவன் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டான். அவன் பேசியதில் மகிழ்ச்சியடைந்த அன்னமய்யா "அருகிலிருந்து நீச்சுத் தண்ணி வாங்கி வரவா என்று கேட்டார். அந்த வாலிபன் நாமே அங்கே போய்விடலாம் என்பது போல் பார்த்தான். அன்னமய்யாவின் உதவியை எதிர்பார்க்காதவனாய் அவனே எழுந்து நடந்து சென்றான். அன்னமய்யாவின் கேள்விகளுக்கு ஒரே மாதிரியான இதழ் விரியாத சிரிப்பைப் பதிலாக்கினான்.

வாலிபனின் பசியைப் போக்கினான் :

ஒரு வேப்பமரத்தின் அடியில் ஏகப்பட்ட மண்கலயங்கள் கஞ்சியால் நிரப்பப்பட்டிருந்தன. சிரட்டையைத் துடைத்து அதில் நீத்துபாகத்தை அவனிடம் நீட்டினான். அக்கஞ்சியை உறிஞ்சியபோது அவனுக்குக் கண்கள் சொருகின. மிடறு

www.Padasalai.Net

தொண்டை வழியாக இறங்குவதன் சுகத்தை முகம் சொல்லியது. “உட்கார்ந்து குடிங்க” என்று உபசரித்தான். இரண்டாவது முறையும் வாங்கிக் குடித்தான். அதை உறிஞ்சிக் குடிக்கும்போது "ஹு" என்கிற அனுபவிப்பின் குரல் அவனிடமிருந்து வந்தது. கஞ்சியைக் குடித்துவிட்டு வேப்பமரத்து நிழலே அவனுக்குச் சொர்க்கமாய்த் தூங்கச் செய்தது. வந்தவனின் நிறைவைவிட மேலான நிறைவுஅன்னமய்யாவுக்கு ஏற்பட்டது. குழந்தையைப் பார்க்கும் அன்னையைப் போல் பிரியத்துடன் அவனைப் பார்த்துக்கொண்டிருந்தார் அன்னமய்யா.

அன்னமய்யா - பெயர் பொருத்தம் :

வந்தவன் தூங்கி எழுந்ததும் அவனைச் சுப்பையாவின் புஞ்சைக்கு அழைத்துச் சென்றான் அன்னமய்யா. வந்தவனிடம் அன்னமய்யா எங்கிருந்து வரீங்க? எங்க போகணும்? என்று கேட்டான். ரொம்ப தொலைவிலிருந்து, தம்பீ உன் பெயரென்ன? என்று கேட்டான். அன்னமய்யா என்று சொன்னதும் வந்தவன் அந்தப் பேரை மனசுக்குள் திருப்பித் திருப்பிச் சொல்லிப் பார்த்துக்கொண்டான். எவ்வளவு பொருத்தம் என்று நினைத்துக் கொண்டான் போலிருக்கிறது. எனக்கு இன்று நீ இடும் அன்னம் தான் என்று மனவோட்டம் ஓடியது. தன்னுடைய சொந்தப் பெயர் பரமேஸ்வரன் என்றும் புதுப்பெயர் மணி என்றும் கூறி, இனிமேல் மணி என்றே கூப்பிடு என்றும் கேட்டுக் கொண்டான். சுப்பையாவைப்பற்றி அவனிடம் கூறினான் அன்னமய்யா.

சுப்பையாவுடன் உணவு உண்ணல் :

அன்னமய்யாவுடன் வந்த புது ஆளையும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். அவரையும் தங்களுடன் உண்ணும்படி உபசரித்தார்கள். அனைவரும் வட்டமாக அமர்ந்துகொண்டனர். ஒரு கால் உருண்டை கம்மஞ்சோற்றை இடது கையில் வைத்தனர். அன்னமய்யாவும் சுப்பையாவும் அவ்வாறுதான் பெற்றுக்கொண்டனர். அச்சோற்றில் சிறு பள்ளம் செய்து துவையல் வைத்தனர்.

முடிவுரை :

அன்னமய்யாவும் சுப்பையாவும் ஆளுக்கு ஒரு உருண்டை சாப்பிட்டார்கள். சாப்பிட்டு முடித்ததும் அங்கிருந்தவர்கள் உட்கார்ந்து ஊர்க்கதைகள் பேசினர். மணி அமைதியாகக் கண்களை மூடிக் கிடந்தார். யாரென்றே அறியாத மணியை அழைத்துவந்து அவருக்கு அன்னமிட்டு பெயருக்கேற்றார்போல் நடந்துகொண்டார் அன்னமய்யா.

தயாரிப்பு :

எஸ். ஜெயசெல்வன்

பட்டதாரி ஆசிரியர் ( தமிழ் )

www.Padasalai.Net

பாணாதுறை மேல்நிலைப்பள்ளி, கும்பகோணம்

தொடர்புக்கு : 9443740120

www.Padasalai.Net